பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 11 2025 6.30

# மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) அரிய வகை கனிம உற்பத்தியை ஊக்குவிக்க வகை செய்யும் 7 ஆயிரத்து 280 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) மாநகரங்களுக்கு இணையான வசதிகள் கிராமங்களிலும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

3) கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரண உதவிகளை தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4) குமரிக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வடதமிழகம், புதுவை கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா நான்குக்கு மூன்று என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

அரிய வகை கனிம உற்பத்தியை ஊக்குவிக்க வகை செய்யும் 7 ஆயிரத்து 280 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், அரிய வகை புவி கனிம காந்த உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கு ஏதுவாக, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு இந்த திட்டம் உதவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><><<

இஸ்ரோவின் 57 செயற்கைக்கோள்கள் செயல்பாட்டில் உள்ளதாக அதன் தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

இன்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – நாராயணன் – 54 செகண்ட்ஸ்)

>><><><><><<

மாநகரங்களுக்கு இணையான வசதிகள் கிராமங்களிலும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருவதாக நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மகளிர் தங்கள் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>><><><><<

கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்டா மற்றும் இதர மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மழையினால் பாதிக்கப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பயிர் பாதிப்பு குறித்த கணக்கெடுப்புகளை திமுக அரசு முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

>><><><><<

மலைப் பகுதிகளையும், வனப் பகுதிகளையும் பாதுகாக்க கொண்டு வரப்பட்ட சிறப்பு சட்டங்களையும், விதிகளையும் கண்டிப்புடன் பின்பற்றுமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம் – திரு முகமது ஷபீக் அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

>><><><><><<

குமரிக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைந்து வடதமிழகம், புதுவை கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் -1– 21 செகண்ட்ஸ்)

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் -2– 35 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, டெல்டா மற்றும் வடதமிழக கடலோரப் பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்ற எச்சரிக்கையை அடுத்து, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களை தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த மாவட்டங்களில் மாநில பேரிடர் மீட்புப் படையின் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதவிர, தேசிய பேரிடர் மீட்பு படைக் குழுக்களும் சென்னை, விழுப்புரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், அவசரகால செயல்பாட்டு மையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மழை பாதிப்புகளை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் விரிவாக கேட்டறிந்தார்.

>><><><><><<

தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக நெல்லை மண்டல தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் திரு சிவசண்முகம் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – சிவசண்முகம் – 46 செகண்ட்ஸ்)*

*>><><><><><<*

## *மாவட்டச் செய்திகள்*

*பெரம்பலூர் மாவட்டம் குன்னத்தில் புதிய மின்பகிர்மான கோட்டத்தை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று திறந்து வைத்தார்.*

*---------------*

*தர்மபுரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த விழிப்புணர்வு வாகனத்தின் சேவையை ஆட்சியர் திரு சதீஷ் இன்று தொடங்கி வைத்தார்.*

*------------------*

*நாமக்கல் மாவட்டத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கடன் முகாம்கள் மூலம் 50 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.*

*----------------------*

*பாரத ரத்னா சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சேலத்தில் இன்று நடைபெற்ற ஒற்றுமை தின பேரணியில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றனர்.*

*----------------*

*மதுரை மாவட்டம் தெத்தூர் கிராமத்தில் குறைந்த விலை வெங்காய சேமிப்புக் கிடங்கினை ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று ஆய்வு செய்தார்.*

-------------------

*கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் கல்விக் கடன் வழங்கும் முகாம் இன்று நடைபெற்றது.*

>><><><><><<

## விளையாட்டுச் செய்திகள்

*அஸ்லான் ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்தியா நான்குக்கு மூன்று என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது*

*மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில், செல்வம் கார்த்தி, சுர்ஜித் சிங், அமித் ரோஹிதாஸ் மற்றும் சஞ்சய் தலா ஒரு கோல் அடித்தனர்.*

-------------

*உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee – Taneesha Kotecha இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ரொமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதிற்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 14-12, 14-16, 12-10, 9-11, 11-5*

என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் *Daniel Berzosa* – உக்ரைனின் *Veronika* இணையை வென்றது.

*>> <<*